# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

## O.S.92/2020

## CNR.No.TNCB19000

Date:02.12.2024 PW2

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | கனகராஜ் | **வயது** | 65 |
| க/பெ | ரங்கசாமி | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | மேட்டுப்பாளையம் | **மாவட்டம்** | கோவை |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 2nd December 2024.

வா.சா.2 மீண்டும் வரவழைக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

**2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் 7ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். எனது முதல்விசாரணையில் எனக்கு சொந்தமாக பூமி உள்ளதாக சொல்லியிருக்கிறேன். 1, 2 பிரதிவாதிகள் பூமிக்கு மேற்புறமாக எனது பூமி உள்ளது. நான் 60 வருடங்களாக விவசாயம் செய்து வருகிறேன். வாதிகளும் 1, 2 பிரதிவாதிகளும் ஒன்றாக விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளை தவிர வேறு யாரும் விவசாயம் செய்யவில்லை என்றால் சரிதான்.

3ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

எனது பூமிக்கு எந்த திசையில் வழக்கு சொத்து உள்ளது என்றால் எனது பூமிக்கு கிழக்கு திசையில் உள்ளது. தாவா சொத்தில் கிணறு சர்வீஸ் இல்லை. அது வானம் பார்த்த பூமி. தாவா சொத்தை யார் எப்படி வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. ஆதியில் தாவா சொத்தில் யார் விவசாயம் செய்து வந்தார்கள் என்றால் சுமார் 60 வருடங்களாக லவக்குசா, ராஜப்பன், பேபி, சாந்தாமணி, பாப்பாத்தி மற்றும் செல்வி ஆகியோர்கள் விவசாயம் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு முன்னாடி யார் விவசாயம் செய்து வந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் இருந்தவரையில் எனக்கு தெரியும்.

தாவா சொத்தில் சோளம், சாமை விதைப்பார்கள். தாவா சொத்தை 1969 ல் 3ம் பிரதிவாதி விலைக்கு வாங்கிவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதி கிரையம் பெற்றதிலிருந்து அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை யார் சொன்னது என்றால் அதுபற்றி

தெரியாது என்று சொல்லிவிட்டு தற்போது பூமிக்காரர்கள் சொல்லி எனக்கு தெரியும் அதிலுள்ள விபரங்கள் எனக்கு தெரியும் என்று கூறுகிறார். பாப்பாத்தி, சாந்தி , பேபி ஆகியோர்கள் எனக்கு என்ன உறவுமுறை என்றால் உறவுமுறை இல்லை. வாதிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3 ம் பிரதிவாதி தாவா சொத்தை விலைக்கு வாங்கி அனுபவத்தில் இருந்த விபரம் தெரியும் என்றும் அதன் பிறகு 5 ம் பிரதிவாதி வாங்கிய விபரம் தெரியும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தின் சுவாதீனம் பற்றி சாட்சி சொல்வதற்கு எனக்கு அருகதை கிடையாது என்றால் சரியல்ல. எனது சாட்சியம் நிராகரிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

( வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக் கப்படுகிறது.)

| |
|---|
| திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார். |

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.